



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 360 | 22.06.2026 | MONDAY | AANI : 8 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 360 | 22.06.2026 | திங்கள்கிழமை | ஆனி : 8 | விலை : ரூ.5/–


## முதல்அமைச்சராக 'முதல்' பிறந்தநாளை கொண்டாடும் விஜய்..

# "இன்று புதிய அறிவிப்பு வெளியாகிறது?"

## அரசியல் உள்நோக்கம் கொண்டவை; பாகிஸ்தான் அதிபருக்கு இந்தியா கடும் கண்டனம்

**புதுடில்லி: ஜூன்.22–**

இந்தியாவில் சிறுபான்மையினர் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் நடத்தப்படும் விதம் குறித்து பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி தெரிவித்த கருத்துக்களுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாகிஸ்தான் அதிபர் தெரிவித்த ஆதாரமற்ற கருத்துக்களை இந்தியா திட்டவட்டமாக நிராகரிக்கிறது. எப்படியாயினும், இந்தியாவின் உள்விஷயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்க அவருக்கு எந்த உரிமையும் இல்லை.

உலகளாவிய விவாதத்திற்குரிய நாடாக விளங்கும் பாகிஸ்தான், மனித உரிமைகள் விஷயத்தில் மோசமான வரலாற்றை கொண்டு இருக்கும் போது, இந்தக் கருத்துக்கள் குறிப்பாக அபத்தமானவை. பல்வேறு மதங்களைச் சேர்ந்த சிறுபான்மையினரைத் திட்டமிட்டுக் குறிவைத்து, அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் பாகிஸ்தானின் நீண்டகால வரலாறு மிகவும் பெயர்போனதாகும்.

இந்த யதார்த்தத்தைக் கருத்தில் கொள்ளும்போது, அதிபரின் கருத்துக்கள், பாகிஸ்தானின் மதவெறி மற்றும் வெறுப்பு நிறைந்த தேசியக் கொள்கைகளால் தூண்டப்பட்ட ஒரு அரசியல் உள்நோக்கம் கொண்டவை. இவ்வாறு ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

சென்னை, ஜூன்.22-

தமிழக முதல்அமைச்சராக பொறுப்பேற்ற பின் தனது முதல் பிறந்தநாளை இன்று (ஜூன் 22ம் தேதி) கொண்டாட உள்ளார் விஜய். அவரது பிறந்தநாள் கொண்டாட்டத்தை இப்போதே அவரது கட்சியினர் கொண்டாட ஆரம்பித்துவிட்டனர்.

**தமிழக வெற்றிக்கழகம்**

தமிழ் திரையுலகின் உச்ச நடிகராக வலம் வந்த விஜய் கடந்த 2024ம் ஆண்டு பிப்ரவரி 2ந்தேதி ஒற்றை அறிக்கை மூலம் அரசியல் கட்சி தொடங்குவதாக அறிவித்தார். தனது கட்சிக்கு தமிழக வெற்றிக்கழகம் என்று பெயர் சூட்டினார்.

**'விசில்' சத்தம்**

விக்கிரவாண்டியில் முதல் மாநாட்டையும், மதுரையில் 2வது மாநாட்டையும் நடத்தி தமிழக அரசியலை அதிர செய்தார். லட்சக்கணக்கான மக்கள் கூடிய அந்த மாநாடுகளை இந்தியாவே உற்று நோக்கியது. அரசியலில்



ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்து வைத்த விஜய், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், அம்பேத்கர், வீரமங்கை வேலு நாச்சியார், அஞ்சலையம்மாளை கொள்கை தலைவர்களாக அறிவித்தார்.

கட்சி தொடங்கி 2 ஆண்டுகளிலேயே சட்டசபை பொதுதேர்தலை த.வெ.க. எதிர்கொண்டது. விசில் சின்னத்துடன் கூட்டணியின்றி மக்களை சந்தித்த விஜய், 'உங்களுக்காக எல்லாவற்றையும் விட்டு வந்திருக்கிறேன், எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்' என்று பிரசாரம் மேற்கொண்டார். அவரின் பிரசாரம் மக்கள் மனதை தொட்டது. அவர் பிரசாரத்திற்கு சென்ற, செல்லாத இடங்களிலும் 'விசில்' சத்தம் தெறிக்க விட்டது.

**முதல்அமைச்சர் விஜய்யின் 52வது பிறந்தநாள்**

திரையில் மட்டுமல்ல. தேர்தலிலும் விஜய் 'சர்க்கார்' அமைய மக்கள் அமோக ஆதரவு அளித்தனர். 'உச்ச நடிகர்' என்ற அடையாளத்தை தாண்டி தமிழக முதல்அமைச்சர் விஜய் என்று வரலாறு உச்சரிக்க தொடங்கியது. மே 10ந்தேதி ஆட்சி பொறுப்பேற்று, ஒரு மாதத்தை நிறைவு செய்து இருக்கும் முதல்அமைச்சர் விஜய்க்கு நாளை (திங்கட்கிழமை) 52வது பிறந்தநாள்.

இதுவரை, நடிகராக பிறந்தநாளை கொண்டாடிய விஜய் முதல்அமைச்சராக தனது 'முதல்' பிறந்தநாளை கொண்டாட இருக்கிறார். இது அவரது ரசிகர்களையும், தொண்டர்களையும் உற்சாகப்படுத்தி உள்ளது. தற்போது, சட்டசபை கூட்டத்தொடர் நடக்கும் நிலையில், சட்டசபையில் நாளை அவருக்கு சபாநாயகர், அமைச்சர்கள், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாழ்த்து கூற இருக்கிறார்கள்.

**இன்று புதிய அறிவிப்பு**

முதல் அமைச்சராக பிறந்தநாளை கொண்டாடும் விஜய் சட்டசபையில் இன்று புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

முதல்அமைச்சர் விஜய்யின் பிறந்தநாளையொட்டி தமிழகம் முழுவதும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கோவில்களில் சிறப்பு பூஜைகள், அன்னதானம், நல உதவிகள் வழங்க த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் திட்டமிட்டு இருக்கிறார்கள்.











■ திருப்பூர் தெற்கு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் தலைவரும், தமிழக முதலமைச்சர் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, உடுமலை மாரியம்மன் திருக்கோயிலில் ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் மற்றும் சிறப்பு பூஜை வழிபாடு செய்யப்பட்டது, வீட்டு வசதித்துறை முன்னாள் அமைச்சர் உடுமலை கே ராதாகிருஷ்ணன் அவர்கள் வழிகாட்டுதல் படி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் எஸ் திருமலை அவர்கள் வழிகாட்டுதல் படியும், உடுமலை நகரத் தெற்கு செயலாளர் எஸ் அபுதாகிர் அவர்கள் முன்னிலை வகிக்க பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது, இந்நிகழ்ச்சியில் 15,, 16 வது வார்டு சார்பாகவும், ருத்ரேஸ்வரன் அவர்கள் ஏற்பட்டில் அன்னதானம் நடைபெற்றது. உடன் பெரிய கோட்டை முருகேசன், நகர மன்ற முன்னாள் உறுப்பினர் பாலு, ஆட்டோ பாண்டியன், மனோஜ் குமார், லோகேஷ், கௌதம், பிரவீன் குமார், ஶ்ரீதர், அர்ஜுன், தினேஷ், மாரிமுத்து, செல்வம், ரஜினி, பாஸ்கர், கதிரேசன், விஸ்வநாதன் மற்றும் தமிழக வெற்றிக்காக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



## அவசர உலகிற்குத் தேவையான உன்னதக் கலை!" வேம்பார் கடற்கரையில் யோகாசனம் செய்து அஞ்சல்துறை அசத்தல்!

கோவில்பட்டி, ஜூன்.22-
ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச யோகாசன தினம் ஜூன் மாதம் 21 தேதி கொண்டாடப்படுகிறது. யோகாசனம் செய்வதினால் ஏற்படும் நன்மைகள் மற்றும் இன்றைய அவசர உலகில் மன அழுத்தத்தை போக்கவும் , உடல் நலம் பேணவும் பெரிதும் உதவும் யோகாசனத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு விளக்கும் விதமாக கோவில்பட்டி கோட்டத்திற்குட்பட்ட அனைத்து அஞ்சலங்களிலும் யோகாசன பயிற்சிகள் உலக யோகா தினமான 21.06.2026 அன்று நடைபெற்றன.குறிப்பாக , சிறப்பு யோசன பயிற்சி நிகழ்ச்சிகளானது , கோவில்பட்டி , சங்கரன்கோவில் - தென்காசி தலைமை அஞ்சலங்களிலும் , குற்றாலம் ,வேம்பார் கடற்கரை மற்றும் வீரிருப்பு புத்தர் கோவில் வளாகம் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
இதைத்தவிரகிராமப்புற மக்களுக்கும் , யோகாசனத்தின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, கிளை அஞ்சலங்கள் மூலம் பல கிராமங்களில் யோகாசன பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன . அஞ்சலங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சிகளுக்கு அந்தந்த பகுதி அஞ்சலக துணை கண்காணிப்பாளர் , ஆய்வாளர்கள் தலைமை தாங்கினார்கள். அஞ்சல் துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யோகாசன பயிற்சிகள் பொதுமக்களுக்கு பெரிதும் பயனுள்ள வகையில் இருந்ததாக அனைத்து தரப்பு மக்களும் கருத்து தெரிவித்தனர்.



## தென்காசி மாவட்டத்தில் அரசு பொதுத்தேர்வில் சிகரம் தொட்ட சாதனையாளர்களுக்கு பாராட்டு விழா

தென்காசி, ஜூன்.22-
தென்காசி விடிஎஸ்ஆர் சில்க்ஸ் மெடி அகடமி, தமிழ்நாடு அறிவியல் இயக்கம், ஆகாஷ் ஐஏஎஸ் அகடமி, ரெடி கல்வி மையம் இணைந்து, பத்து மற்றும் பண்ணிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடம் பிடித்த அரசு, அரசு உதவி பெறும் , தனியார் , சிபிஎஸ்இ ( அனைத்து வகை ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பிரிவில் 100 பள்ளிகளைச் சார்ந்த 550 மாணவர்களுக்கு தென்காசி விடிஎஸ்ஆர் மஹாலில் வைத்து பாராட்டு விழா மிக சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவிற்கு விடிஎஸ் .ஆர் நிர்வாக இயக்குநர் ரகுமான்கான் தலைமை தாங்கினார்.தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் பேரா. பாலுமகேஷ்,TAF IAS Academy நிர்வாக இயக்குநர் மாரியப்பன், ஆசிரியர் ஆவுடை வினாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதியழகன் அறிவியல் பாடல் பாடினார்.பேரா மணிராஜ் வரவேற்றார். உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து முனைவர் சுரேஷ் ஜாண் கென்னடி எடுத்துரைத் தார்.இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக தென்காசி ஆகாஷ் பிரண்ட்ஸ் ஐஏஎஸ் அகடமி நிறுவனர் ஆகாசமூர்த்தி " அறம் செய்ய விரும்பு " விண்ணைத் தொட என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். சிறப்பு விருந்திராக செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி கே. என் . குரு அவர்கள் கலந்து கொண்டு சிகரம் தொட்ட மாணவர்களுக்கு பதக்கங்கள் வழங்கி வாழ்த்தினார்.தென்காசி வட்டார கல்வி அலுவலர் வசந்தி மணவர்களுக்கு பாராட்டுச் சான்று வழங்கினார்.ரெடி கல்வி மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் வில்சன் அருள் ஆனந்தன் பள்ளிகளுக்கு பாராட்டு கேடயம் வழங்கினார். இலஞ்சி ஆர். பி பள்ளி ஆசிரியரும் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலருமான சுரேஷ் குமார் நிகழ்சியினை ஒருங்கிணைத்தார். ஆருஷியின் பாடல்சுந்தர் பலகுரல் பேச்சு அனைவரின் கவனத்தை ஈர்த்தது.நடுப்பேட்டை பள்ளி வாசல் இமாம் இசாக்மதுபாலா சித்தாய், சுரேஷ் தலைமை ஆசிரியர்கள் குலாம் , ரவி , பாதுஷா பெற்றோர்கள் ஆசிரியர்கள் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் நிறைவில்நூலகர் ராஜா நன்றி கூறினார்.

## ஈரோடு சோலார் எடையன்காட்டுவலசு பகுதியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்தும் குரூப் I, II, IIA, IV ஆகிய போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி






ஈரோடு, ஜூன்.22-
ஈரோடு சோலார் எடையன்காட்டுவலசு பகுதியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்தும் குரூப் I, II, IIA, IV ஆகிய போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்பினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி அவர்கள் இன்று முறைப்படி துவக்கி வைத்தார்.ஈரோடு மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் 'எம் அகாடமி' சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கட்டணமில்லா போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினைத் துவக்கி வைத்து அமைச்சர் அவர்கள் பேசியதாவது:
"தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் தங்குதடையின்றிச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே இன்றைய தினம் இப்போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பு துவக்கப்பட்டுள்ளது.இந்த 'எம் அகாடமி' பயிற்சி வகுப்பானது கடந்த 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி வகுப்பில் பயின்ற 10 மாணவ, மாணவியர்கள் ஏற்கனவே பல்வேறு போட்டித் தேர்வுகளில் அசாத்திய வெற்றி பெற்று, தற்போது பல அரசுத் துறைகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்." என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.மேலும், "இலவசமாக வழங்கப்படும் இந்த நல்வாய்ப்பினை அனைத்துத் தரப்பு மாணவர்களும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; திட்டமிட்டுப் படித்தால் போட்டித் தேர்வுகளில் மிக எளிதாக வெற்றி பெறலாம்" என்றும், "இம்மையத்திலிருந்து ஏராளமான மாணவர்கள் வெற்றி பெற்று அரசுப் பணியில் சேர்கிறார்கள் என்ற செய்தி விரைவில் தன் காதுகளுக்கு எட்ட வேண்டும் என்பதே தனது கனவு" என்றும் கூறி, அகாடமியின் உறுப்பினர்களுக்குத் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ராஜகோபால் சுன்கரா இ.ஆ.ப., ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் திரு. M.சிவக்ரிஷ்ணமூர்த்தி இ.ஆ.ப., பள்ளித் தலைமை ஆசிரியர் திருமதி. பி.அமுதா, எம் அகாடமி தலைவர் திரு. ப.மணிமுத்து, செயலாளர் திரு. அ.ஹாஜித்பாய், அக்னி ஸ்டீல் இயக்குனர் திரு. கே.தங்கவேல் மற்றும் திரு. எஸ்.அய்யாசாமி உட்படப் பல துறை சார்ந்த அரசு உயர் அதிகாரிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் திரளாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.



■ திசையன்விளை நகர தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழக முதல்வர் விஜயின் 52 ஆவது பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்குவிழா அன்னதானம் வழங்கும் விழா என முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது. விழாவில் நெல்லை தெற்கு மாவட்ட கழக செயலாளர் ராஜகோபால் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சதீஷ் கிறிஸ்டோபர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அருகில் நகரச் செயலாளர் கில்லி ராஜா ஏகே. சீனிவாசன் சூடு உயர்ந்தான் விலை தில்லை முத்துக்குமார் சுதன் முத்துராமலிங்கம் நீலகிருஷ்ணன் உட்பட பல நிர்வாகிகள் உள்ளனர்.



■ ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சதீஷ் கிறிஸ்டோபருடன் நமது சக்கர வியூகம் நெல்லை மாவட்ட செய்தியாளர் டிபி சரவணன் மரியாதை நிமித்தமான சந்திப்பு...



■ தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதி சாத்தான்குளத்தில் ஜூன் 22 தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் கூஷிநி.சரவணன் விலிகி.அவர்கள் கேக் வெட்டி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் அன்னதானம் வழங்கப்பட்டது



## தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை, ஜூன்.22-
தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சேலம், ஈரோடு, திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. கோவை, நீலகிரி, திண்டுக்கல், தேனி, சிவகங்கை மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது

## "ஒரே நாளில் முப்பரிமாண சேவைத் திருவிழா!" ராதாபுரத்தில் டாக்டர் எஸ்.கே. கிறிஸ்டோபர் MLA நடத்திய அதிரடி மெகா முகாம்!



ராதாபுரம், ஜூன்.22-
தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, ராதாபுரம் தொகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மாபெரும் இலவச மருத்துவ ரத்ததான முகாம், இலவச இசேவை முகாம் மற்றும் 'நம்ம இராதாபுரம்' இணையதளத் தொடக்க விழா ஆகிய பன்முக மக்கள் நல நிகழ்வுகள் ராதாபுரத்தில் மிக எழுச்சியாக நடைபெற்றன.
எஸ்.கே. கிறிஸ்டோபர் MLA தலைமை – குவியும் பலன்கள்:ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.கே. கிறிஸ்டோபர் அவர்கள் இம்மெகா முகாமிற்குத் தலைமை தாங்கி, அனைத்துச் சேவைகளையும் முன்னின்று தொடங்கி வைத்தார். இம்முகாமில் நடைபெற்ற இலவச பொது மருத்துவ முகாமிற்கு ராதாபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த 270க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வருகை தந்து, தங்களின் உடல்நலனைப் பரிசோதித்துத் தகுந்த மருத்துவ ஆலோசனைகளையும், மருந்துகளையும் இலவசமாகப் பெற்றுப் பயன்பெற்றனர்.
*67 பேர் ரத்ததானம் - 180 இசேவை சான்றிதழ்கள்:*மக்களின் அவசரக் கால உயிர் காக்கும் உன்னதப் பணியாக நடைபெற்ற ரத்ததான முகாமில், கழகத் தம்பிகள் மற்றும் பொதுமக்கள் என 67 கொடையாளர்கள் கலந்துகொண்டு தங்களின் ரத்தத்தைத் தானமாக வழங்கினர். அதேபோல, ஒரே கூரையின் கீழ் நடைபெற்ற இலவச இசேவை முகாம் மூலம் 180க்கும் மேற்பட்ட அத்தியாவசியச் சான்றிதழ்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டன. இதில் குறிப்பாகப் புதிய குடும்ப அட்டை, குடும்ப அட்டையில் பெயர் திருத்தம், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையில் பெயர் திருத்தம் போன்ற சேவைகள் எவ்விதக் கட்டணமுமின்றிச் சாமானிய மக்களுக்குப் போர்க்கால அடிப்படையில் செய்து தரப்பட்டன.
இணையதளம் ஓபன் – நிபுணர் மருத்துவர்கள் குழு:*இவ்விழாவின் முக்கிய மைல்கல்லாக, தொகுதி மக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் நோக்கில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.கே. கிறிஸ்டோபர் அவர்களால் வடிவமைக்கப்பட்ட 'நம்ம இராதாபுரம்' என்ற பிரத்யேக இணையதளம் அதிகாரப்பூர்வமாகப் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது. இனி பொதுமக்கள் தங்களின் கிராமம், தெரு அல்லது பகுதி சார்ந்த உள்கட்டமைப்புக் குறைகளைத் தங்களின் தொலைபேசி மூலமாகவே, வீட்டிலிருந்தபடியே இவ்விணையதளத்தில் பதிவு செய்து விரைவான தீர்வைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இச் சிறப்புமிக்க முகாமில் பொது மருத்துவர் டாக்டர் இளவரசன், எலும்பியல் நிபுணர் டாக்டர் ராமராஜ், தோல் மருத்துவர் டாக்டர் சுவேதா, குழந்தை நல மருத்துவர் டாக்டர் டென்னிக்ளாரின், பல் மருத்துவர் டாக்டர் ராஜகுமாரி மற்றும் இயன்முறை மருத்துவர் டாக்டர் ஆல்வின் அன்புராஜ் ஆகியோர் அடங்கிய மருத்துவ வல்லுநர்கள் குழுவினர் கலந்துகொண்டு மக்களுக்குத் தங்களின் அர்ப்பணிப்புமிக்கச் சேவையினை வழங்கினர்.

# “தூய்மை பணியை தனியார் மயமாக்கும் முயற்சியை அரசு கைவிட வேண்டும்” இந்திய கம்யூ

சென்னை, ஜூன்.22–

“தூய்மைப் பணியாளர்கள் நியமனம், நிர்வாகம் அனைத்தும் அரசின் நேரடிப் பொறுப்பில் மட்டுமே இருக்க வேண்டும். இந்த அத்தியாவசிய சேவையை, எந்த நிலையிலும் தனியார் கையில் ஒப்படைக்கக் கூடாது” என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் தாம்பரம், ஆவடி, ஓசூர், வேலூர், கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர், மதுரை, தூத்துக்குடி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் தூய்மைப் பணியை தனியாருக்கு விடுவதற்கான முயற்சியை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருவதாக தகவல் வெளி யாகியுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப் பணியில் ஈடுபட்டு வருபவர்கள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் பொது சுகாதாரம் என்பதில் தூய்மைப் பணி மிகவும் இன்றியமையா நிரந்தர பணியாகும்.

சாதிச் சார்பு சமூக அமைப்பில், தூய்மைப் பணியில் ஈடுபட்டு வரும் அடித்தட்டு உழைக்கும் மக்களை, பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட எந்தவித உரிமைகளும் பெற முடியாத சூழலில் பணியமர்த்துவது சமூக நீதிக் கொள்கைக்கு முரணானதாகும். தனியார் நிறுவனங்கள் தூய்மைப் பணியாளர்களை சட்டபூர்வமாக சுரண்டிக் கொழுக்க முந்தைய ஆட்சியாளர்களால் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த முறைச் சுரண்டலுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான எதிர்ப்புகளை தெரிவித்தது.

போராட்டங்களை முன்னெடுத்தது.



இடதுசாரி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் போராடின. ஆனால் முந்தைய ஆட்சியாளர்கள் தனியார்மயமாக்கக் கூடாது என்ற கோரிக்கையை புறக்கணித்தனர். தற்போதைய புதிய அரசு தனியார் மயமாக்கலுக்கு முடிவு கட்ட வேண்டும். தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள உழைக்கும் மக்களைப் படிப்படியாக அந்தப் பணியில் இருந்து விடுவித்து, மாற்றுப் பணிகளை வழங்குவதும், தூய்மைப் பணியில் நவீன தொழில் நுட்பங்களை புகுத்துவதும், எந்திரமயமாக்குவதும், அவசியமாகும்.

தமிழ்நாட்டிலும், நாட்டின் பிற பகுதிகளிலும், தூய்மைப் பணியை தலைமுறை, தலைமுறையாக குறிப்பிட்ட சமூகப் பிரிவினரின் குலத் தொழிலாகக் கருதும் பிற்போக்குக் கண்ணோட்டத்தை தகர்க்க வேண்டும்.

தூய்மைப் பணியாளர்களின் குடும்பப் பொருளாதார நிலைமைகள், இந்த தொழில் பிரிவுக்குள்ளேயே ஒடுங்கி வாழும் செக்கு மாட்டு வாழ்க்கை முறைக்கு அவர்களை நெட்டித் தள்ளி வருகிறது.

பட்டியல் சாதியினர் நலன் பேணும் சிறப்பு உட்கூறு நிதியும் வேறு திட்டங்களுக்கு மடைமாற்றம் செய்யப்படுகிறது அல்லது செலவு செய்யப்படாமல் ஒன்றிய அரசுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது. இது அரசுக் கட்டமைப்பில் நிலவும் சாதி ஆணவ சார்பு மனநிலையை வெளிப்படுத்துகிறது.

இந்தச் சூழலில் மாநகராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப்பணியை தனியார் மயமாக்கும் முயற்சியை உடனடியாகக் கைவிட வேண்டும். ஏற்கனவே, தற்காலிக முறை, ஒப்பந்த முறையில் பணிபுரியும் அனைத்துத் தூய்மைப் பணியாளர்களுக்கும் பணிப் பாதுகாப்பு, பணி நிரந்தரம் உள்ளிட்ட சமூகப் பொருளாதார பாதுகாப்பு வழங்கிட வேண்டும்.

தூய்மைப் பணியாளர்கள் நியமனம், நிர்வாகம் அனைத்தும் அரசின் நேரடிப் பொறுப்பில் மட்டுமே இருக்க வேண்டும். இந்த அத்தியாவசியச் சேவையை, எந்த நிலையிலும் தனியார் கையில் ஒப்படைக்கக் கூடாது என, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மாமல்லபுரத்தில் சர்வதேச யோகா தின கொண்டாட்டம் மத்திய அமைச்சர் எல்.முருகன் பங்கேற்பு



சென்னை, ஜூன்.22–

யுனெஸ்கோவின் பாரம் பரியச் சின்னமான மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலில் நடைபெற்ற 12 வது சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களில் மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் எல் முருகன் (21 ஜூன் 2026) அன்று கலந்துகொண்டார்.

இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆயுஷ் அமைச்சகம் மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை இணைந்து இந்த யோகாதின நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்ச்சியை குத்து விளக்கேற்றி துவக்கிவைத்த எல் முருகன், பல்வேறு யோகாசனங்களைச் செய்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சருடன் இந்திய கடற்படையினர், விநாயகா மிஷன்ஸ் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள், செங்கல்பட்டிலுள்ள சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியின் மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு யோகாசன ங்களைச் செய்தனர்.

நிகழ்ச்சியில், ஆரோக்கியமான வாழ்வுக்கு யோகா 365 எனும் கையேட்டை அமைச்சர் வெளியிட்டார். தொடர்ந்து பேசிய எல் முருகன், “இந்திய பாரம்பரியத்தின் அடையாளமான யோகா இன்று 180க்கும் மேற்பட்ட நாடுகளில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதற்கு நமது பிரதமர் நரேந்திர மோடி எடுத்த சீரிய முயற்சியே காரணம். அவரின் முயற்சிகளைத் தொடர்ந்து 2014ம் ஆண்டு டிசம்பர் 11ம் நாள் ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 21ம் தேதியை சர்வதேச யோகா தினமாக அங்கீகரித்தது.

நாம் அனைவரும் யோகாவை நமது அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாக்கிக்கொள்ள வேண்டும். இதன்மூலம், சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், மன அழுத்தம் போன்ற நோய்களை தடுக்க முடியும். நமது வாழ்நாளை அதி கரிக்கவும் நோய்களிலிருந்து காக் கவும் யோகா துணைபுரியும் என்பதை உணர்த்தும் நோக்கிலேயே ‘ஆரோக்கியமான முதுமைக் கான யோகா’ என்பது இந்தாண்டுக்கான கருப்பொருளாக அமைக்கப்பட்டுள்ளது” என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் இந்திய தொல் பொருள் ஆய்வுத்துறையின் தென்மண்டல இயக்குநர் என். கே. பதக், மத்திய மக்கள் தொடர்பகத்தின் இயக்குனர் ஜெ காமராஜ், பத்திரிகை தகவல் அலுவலகத்தின் துணை இயக்குனர் சஞ் சய் கோஷ், இந்தியக் கடற்படையின் ஐஎன்எஸ் பல்லவா கமான்டிங் அலுவலர் கேப்டன் பி தினேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# 4 நாட்களில் 4 மாணவர்கள் பலி; நீட் தேர்வை ஒழிக்க அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.22–

நீட் தேர்வை தேசிய அளவில் ரத்து செய்யவோ அல்லது தமிழ்நாட்டுக்கு மட்டும் விலக்கு அளிக்கவோ மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வினாத்தாள் கசிவு காரணமாக கடந்த மாதம் 3ஆம் தேதி நடத்தப்பட்டு ரத்து செய்யப்பட்ட நீட் தேர்வு இன்று மதியம் நடைபெறும் நிலையில், நீட் தேர்வு அச்சம் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் தருமபுரி மற்றும் கிருஷ் ணகிரி மாவட்டங்களில் அடுத் தடுத்து ஒரு மாணவியும், ஒரு மாணவரும் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர் என்ற செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியும், கவலையும் அடைந்தேன். அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரி வித்துக் கொள்கிறேன்.



தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டை அடுத்த எண்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மாணவி ரோஷ்னி 12ஆம் வகுப்பை இரு ஆண்டுகளுக்கு முன் நிறைவு செய்து விட்டு, நீட் தேர்வில் வென்று மருத்துவப் படிப்பில் சேருவதற்காக கடந்த இரு ஆண்டுகளாக முயற்சி செய்து வந்தார். இந்த முறையும் அதே நிலை தான் ஏற்படுமோ என்ற அச்சம் தான் அவரை இந்த முடிவை எடுக்கத் தூண்டியுள்ளது.

அதேபோல், கிருஷ் ணகிரி மாவட்டம் ஓசூரை அடுத்த பாகலூர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த வெற்றியானந்தம் என்ற மாணவர் 12ஆம் வகுப்புத் தேர்வை முடித்து விட்டு, கடந்த 3 ஆண்டுகளாக நீட் தேர்வு எழுதி வந்தார்.

ஆனால், அதில் அவரால் போதிய மதிப்பெண்களை எடுக்க முடியாத நிலையில் நடப்பாண்டிலும் அதே நிலை தான் ஏற்படுமோ என்ற அச்சத்தால் நேற்று காலை தற்கொலை செய்து கொண்டுள்ளார். நீட் தேர்வு மாணவர்களைக் கொல்லும் தேர்வு என்பதற்கு இவை தான் மோசமான எடுத்துக்காட்டு.

ஏற்கனவே, கடந்த 17 ஆம் தேதி கோவையை சேர்ந்த மாணவி அனு கீர்த்தனா, 19ஆம் தேதி சேலம் எடப்பாடியைச் சேர்ந்த கோபிகா என இரு மாணவிகள் தற்கொலை செய்து கொண்ட நிலையில், இந்த இரு நிகழவுகளையும் சேர்த்து 4 நாள்களில் 4 மாணவ, மாணவிகளை நீட் தேர்வுக்கு பலி கொடுத்திருக்கிறோம். இந்தக் கொடுமை தொடரக்கூடாது. அதற்காக நீட் தேர்வை தேசிய அளவில் ரத்து செய்யவோ அல்லது தமிழ்நாட்டுக்கு மட்டும் விலக்கு அளிக்கவோ மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில்

# அமோனியா வாயு கசிவால் 7 பேர் உயிரிழப்பு

திருவள்ளூர், ஜூன்.22–

பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்டவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்டுள்ளது. ஆலையில் ஏற்பட்ட அம்மோனியா வாயு கசிவு காரணமாக 60க்கும் மேற்பட்ட தொழிலா ளர்கள் மயக் கமடை ந்துள்ளார். அம் மோனியா வாயுவை சுவாசித்த சில தொழிலா ளர்களுக்கு வாய், மூக்கில் ரத்தம் கசிந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்ட 9 பேர் ஆபத்தான நிலை யில் மருத்து வமனையில் அனும திக்கப் பட்டு ள்ளனர். சென்னை ஸ்டா ன்லி அரசு மருத்து வமனையில் 9 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. 9 பேரில் 7 பெண்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்டவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். மஞ்சங்கரணையில் உள்ள வேல்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 7 பேர் உயிரிழந்துள்ளார். அமோனியா வாயு கசிவு பாதிப்பை அடுத்து சம்பவ இடத்துக்கு தேசிய பேரிடர் மீட்பு குழு விரைந்துள்ளது. அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்புக் குழு பெரியபாளையத்துக்கு விரைந்துள்ளது.

# மழையில் நனைந்து வீணாகிய 25,000 டன் நெல்மூட்டைகள் தமிழக அரசுக்கு ஜி.கே. வாசன் கண்டனம்

சென்னை, ஜூன்.22–

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அங்கு உற்பத்தியாகும் விளைபொருட்களுக்கு ஏற்ப பாதுகாப்பான சேமிப்பு கிடங்குகளை தமிழக அரசு உருவாக்க வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில், "தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே பட்டீஸ்வரத்தில் திறந்தவெளி நெல் சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டுள்ள 25,000 டன் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகியுள்ளது விவசாயிகளிடையே மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயத் தொழில் இயற்கை சீற்றங்கள் மற்றும் மழை வெள்ளம் போன்ற வற்றால் பாதிக்கப்பட்டு பல்வேறு போராட்டத்திற்கு இடையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகளின் இன்னலை போக்குவதற்கு தமிழக அரசு சார்பில் 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் பதிவு செய்யப்பட்டு 1975ஆம் ஆண்டு அரசு பொது நிறுவனமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.



தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் என்பது விவசாயிகளிடம் இருந்து விளைபொருள்களை கொள்முதல் செய்து, அவற்றை சேமிப்பு கிடங்கில் சேமித்து வைத்து, பின்னர் பொது வினியோக திட்டத்தில் ஏழை, எளிய மக்களுக்கு இந்நிறுவனத்தின் அமுதம் சிறப்பங்காடி மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குகிறது.

கடந்த 50 வருடத்திற்கு மேலாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்த தானியங்களை முறையாக பராமரிக்காமல் வீணடித்து அவற்றின் தரம் குறைவாகவே மக்களுக்கு வினியோகம் செய்து வருகிறது. உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கே தரமற்ற பொருட்கள் வழங்கப்படுவதுதான் காலத்தின் கொடுமை. ஆட்சி மாற்றம் எத்தனை ஏற்பட்டாலும் இந்த காட்சி மட்டும். மாறவில்லை.

விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் நெல்மணிகள் முறையான சேமிப்பு கிடங்குகள் இல்லாமல் வீணாகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விவசாய பருவத்திற்கும் எவ்வளவு டன் நெல் விளையும் என்று தெரியும். ஆனால் உற்பத்திக்கு ஏற்ப அவற்றை சேமிக்க தேவையான சேமிப்பு கிடங்குகளை அரசு உருவாக்காமல் இப்பது ஏன்? கடந்த காலங்களில் இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்புகள், அழிவுகள் உங்களுக்கு தெரியவில்லையா?

மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசு, மக்களுக்கானதாக இருக்க வேண்டும். கடந்த காலங்களில் அரசுகள் செய்த தவறை தற்பொழுதுள்ள த.வெ.க அரசும் தொடரக் கூடாது. நாட்டிற்கே சோறுபோடும் விவசாயிகளின் நலனில் அக்கரையோடு செயல்பட வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அங்கு உற்பத்தியாகும் விளைபொருட்களுக்கு ஏற்ப பாதுகாப்பான சேமிப்பு கிடங்குகளை உருவாக்க வேண்டும் என்று தமிழக அரசை தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) சார்பாக கேட்டுகொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.




# தூத்துக்குடியில் சாத்தான்குளம் மேற்கு ஒன்றியம் சார்பில் பிரம்மாண்ட மருத்துவ முகாம் – நலத்திட்ட உதவிகள்!

தூத்துக்குடி, ஜூன்.22:

தமிழக வெற்றி கழகத்தின் தலைவரும், தமிழக நிரந்தர முதல்வருமான திரு. ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மேற்கு மாவட்டத் தலைவர்/செயலாளர் ஜெகன் ராஜ் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சாத்தான்குளம் மேற்கு ஒன்றியம் மற்றும் நகர இளைஞரணி சார்பாகப் பிரம்மாண்ட மருத்துவ முகாம் மற்றும் மாணவ மாணவியருக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சாத்தான்குளம் மேற்கு ஒன்றிய தவெக நிர்வாகி ஆ.சக்திவேல் அவர்களின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற இம்முகாமில், ஏராளமான பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளும், மருந்துகளும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, பள்ளி மாணவ மாணவியரின் கல்வி ஊக்கத்தை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கு நோட்டு, பேனா மற்றும் புத்தகங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

"சேவைக்காக ஒன்று சேர்ந்தோம்... மக்களின் நலனுக்காக செயல்பட்டோம்... இளைஞர்களின் எழுச்சியுடன் வெற்றிப் பாதையில் முன்னேறுகிறோம்!" என்ற உத்வேக முழக்கத்துடன் தவெக நிர்வாகிகள் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்:

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட மற்றும் ஒன்றிய, நகர நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட நிர்வாகிகள்:

M.சிவலிங்கம் (மாவட்ட இணை செயலாளர்)

T.இன்பராஜ் (மாவட்ட துணை செயலாளர்)

R.மாரீஸ்வரன், J.வசந்த் (மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள்)

ஒன்றிய நிர்வாகிகள்:

M.குமார் பாண்டியன் (ஸ்ரீவைகுண்டம் ஒன்றிய செயலாளர்)

M.ஆனந்த் (மத்திய ஒன்றிய செயலாளர்)

Y.சந்தனராஜ் (மேற்கு ஒன்றிய செயலாளர்), ஆனந்த் (இணை செயலாளர்)

தெற்கு ஒன்றிய நிர்வாகிகள்:

S.மிக்கேல் ராஜ் (தெற்கு ஒன்றிய இணை செயலாளர்)

M.சிவராமன், P.L.வடிவேல் (துணை செயலாளர்கள்)

T.S.அச்சுதன் (பொருளாளர்)

J.குயின்சன் ராஜ் (தெற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர்)

சாத்தான்குளம் நகர நிர்வாகிகள்:

N.P.சிவா (நகர செயலாளர்)

வீரபத்திரன் (இணை செயலாளர்), M.சிவனேஷ் (துணை செயலாளர்), H.யூசுப் (பொருளாளர்)

சாத்தான்குளம் இளைஞரணி நிர்வாகிகள்:

A.கோமதிநாயகம், S.வெங்கடேஷ், அழகுமாணிக்கம், A.சுயம்பு மற்றும் தவெக தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கேரளத்தில் பரவி வரும் ‘ஷிகெல்லா’ நோய் தொற்று எதிரொலி கண்காணிப்பு வளையத்தில் மதுரை அரசு மருத்துவமனைகள்

சென்னை, ஜூன்.22–

கேரளத்தில் பரவிவரும் ‘ஷிகெல்லா’ பாக்டீரியா தொற்று எதிரொலியாக மதுரை மாவட்ட அரசு மருத்துவமனைகள் கண்காணிப்பு வளையத் துக்குள் கொண் டுவரப் பட்டுள்ளன.

ஷிகெல்லா பாக்டீரியா தொற்று கேரளாவில் வேக மாகப் பரவி வருகிறது. இது அசுத்தமான உணவு, குடிநீர், சுகா தாரமற்ற சூழல், பாதிக்கப் பட்டவர்கள் மூலம் பரவும் குடல் நோயாகும். கோழிக் கோடு மற்றும் வயநாடு மாவட்டங்களில் நூற்றுக்கும் அதிக மானோர் இத்தொற்றால் பாதிக்கப் பட்டுள்ளனர். குறிப்பாக, அங்குள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் முதியோர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த தொற்று, மனிதர்களின் குடலை தாக்கி கடுமையான வயிற்றுப் போக்கு, தீவிர உடல்நலக்குறைவை ஏற்படுத்தும் ஒரு ஆபத்தான பாக்டீரியா ஆகும். இவை 10 முதல்



100 வரை எண்ணிக்கையில் உடலுக்குள் சென்றாலே எளிதில் தொற்றை ஏற்படுத்திவிடும் அபாயம் உள்ளது. பொதுமக்கள் சுகாதாரமாக இருந்தால், இந்நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என மருத்துவர்கள் தெரிவிக் கின்றனர்.

இது குறித்து மதுரை மாவட்ட சுகாதார அலுவலர் பொற் செல்வன் தெரிவித்ததாவது: மதுரை மாவட்டத்தில் இதுவரை ஷிகெல்லா பாக்டீரியா தொற்றால் யாரும் பாதிக்கப்படவில்லை. இருப்பினும், இத்தொற்றில் இருந்து மக்களை காக்கவும், பாதிப்புகளைத் தடுக்கவும், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் தீவிர கண் காணிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

கடுமையான வயிற்றுப் போக்கு, காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் வருபவர்களுக்காக மருத்துவமனைகளில் தனி வார்டுகள் அமைக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப் படுகிறது. நீர்ச்சத்து குறை பாட்டைத் தடுக்க ஓ.ஆர்.எஸ். கரைசல்கள், குளுக் கோஸ் ஆகியவை கையிருப்பில் உள்ளன.

பாக்டீரியாவை துல்லி யமாக கண்டறிய மலம், ரத்த மாதிரிகளை பரிசோதிக்கும் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. கைகளை சோப்பு போட்டு கழுவுதல், காய்ச்சிய நீரைப் பருகுதல் போன்ற சுகாதார விழிப்புணர்வை மருத்துவமனைப் பணி யாளர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்கி வருகிறோம். குறிப்பாக, குழந்தைகள், முதியோர் மிகவும் சுகாதாரமாக இருக்க வேண்டும். இந்த நோய் அறிகுறிகள் தென் பட்டால், உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அறிவுறுத்தினார்.

# குறுக்குவழியில் ஆட்சி அமைக்க முயற்சி; அமைச்சர் நிர்மல்குமார் குற்றச்சாட்டு

**மதுரை: ஜூன்.22–**

''ஸ்டாலின் சார்ந்தப்பட்ட ஒரு சில நபர்களும், இபிஎஸ் சார்ந்த ஒரு சில நபர்களும் சேர்ந்தும் குறுக்குவழியில் ஆட்சி அமைக்க முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்'' என அமைச்சர் நிர்மல்குமார் குற்றம் சாட்டியுள்ளார்.



மதுரையில் நிருபர்களிடம் அமைச்சர் நிர்மல்குமார் கூறியதாவது: இரண்டு குடும்பமும் அவர்களை காப்பாற்றி கொள்ள வேண்டும் என்பதற்காக, ஆட்சி அதிகாரத்தில் இருந்து சொத்துக்களை காப்பாற்றி கொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குள் ஒப்பந்தம் போட்டு அரசு அமைக்க முயற்சி செய்தார்கள். ஆனால் அது முடியவில்லை. தற்போது வரை இருவரும் ஆட்சி அமைப்பதற்கு குறுக்கு வழியில் முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

இப்பொழுதும் சொல்கிறோம். நீங்கள் குறித்து வைத்து கொள்ளலாம். ஸ்டாலின் சார்ந்தப்பட்ட ஒரு சில நபர்களும், இபிஎஸ் சார்ந்த ஒரு சில நபர்களும் சேர்ந்தும் குறுக்குவழியில் ஆட்சி அமைக்க முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். அதனை பிடிக்காமல் அவர்களது தொண்டர்கள் எத்தனை நாட்கள் இந்த குடும்பத்தை காப்பாற்றுவதற்கு அவர்கள் வேலை பார்த்துக்கொண்டு இருப்பார்கள்.

நேர்மையாக அரசியல் செய்து, களத்தில் மக்களோடு மக்களாக இருக்கும் நிர்வாகிகள் யாரும் இதை ஏற்றுக்கொள்ளாமல், எல்லோரும் வந்து தவெகவில் சேருகிறார்கள். அவர்களையும் அரவணைத்து, அவர்களுக்கு தேவையான அளவு, இருப்பிடத்தை ஏற்படுத்த எங்களது கட்சியில் கொஞ்சம் நாட்கள் எடுக்கும். அதனை தான் நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம். இவ்வாறு அமைச்சர் நிர்மல்குமார் கூறினார்.
















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000